விக்கிப்பீடியா நண்பர்களுக்கும் தமிழன்பர்களுக்கும் கலையுலக ஆசிரியர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் எனது வணக்கம்.

இந்தப்பட்டறையில் பங்கேற்க என்னை அழைத்தமைக்கு என் மகிழ்ச்சிகலந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். 2005 ஜூலையிலிருந்து நான் ஆங்கிலவிக்கிபீடியாவுக்கு ஆன்மீகத்தில் சில கட்டுரைகள் எழுதியிருக்கிறேன். அப்பொழுதெல்லாம் தமிழ் விக்கிபீடியாவில் என்ன இருக்கிறதென்று பார்க்க வேணுமென்றோர் ஆசை இருந்ததுண்டு. ஆனால் அது 2007 ஏப்ரல் வரை நடைபெறவில்லை. கடைசியில் நான் தமிழ் விக்கிபீடியாவைப் பார்த்தபோது அதனில் கணிதத் துறையில் கல்லூரிக் கல்வித்தரத்தில் கட்டுரைகளே இல்லை என்பதை உணர்ந்தேன். நான் கல்லூரியில் கணிதம் படித்த நாட்களிலிருந்தே எனக்கு இந்த மாபெரும் கணிதத்துறை நல்முத்துக்களையெல்லாம் நம் தமிழ்நாட்டு பாமரமக்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்ற அவா துளிர்விட்டுக்கொண்டே இருந்தது. அந்த உந்துதலில்தான் முதன் முதலில் 12 ஏப்ரல் 2007 இல் தமிழ் விக்கிபீடியாவில் கணிதத்துறையிலும் ஆன்மீகத்துறையிலும் கட்டுரைகள் எழுதத் தொடங்கினேன். ஆறு மாதங்களுக்குள் கணிதத்துறையில், இடவியல், பகுவியல், இயற்கணிதம். சேர்வியல் முதலிய கிளைத்துறைகளில் 100 முழுக்கட்டுரைகளும், வானவியலில் 10 கட்டுரைகளும், கணித வல்லுனர்களைப் பற்றிய 18 கட்டுரைகளும் எழுதினேன். தமிழ் விக்கிபீடியாவை ஆரம்பத்திலிருந்து பயிரிட்டு வளர்த்து இன்னமும் கட்டிக்காத்துக்கொண்டிருக்கும் நற்கீரன், சுந்தர், செல்வா, கோபி, ரவி, மயூரநாதன், சிவகுமார், உமாபதி, கனகு இவர்களனைவரும் எனக்கு ஏராளமான ஊக்கமளித்து பாராட்டினர். அவர்களுக்கெல்லாம் எனது நன்றி. அக்டோபர் 2007 க்குப்பிறகு நான் இந்தியா திரும்ப வேண்டியதாயிற்று. பிறகு பல காரணங்களால் இன்றுவரையில் நான் ஒன்றுமே எழுதவில்லை.
அந்த ஆறுமாதங்களில் நான் எழுதிய அனுபவங்களினால் தமிழ் விக்கிபீடியாவுக்காக நான் கண்ட கனவுகளைப்பற்றியும், எப்படி எல்லா இளைஞர்களும் த.வி.க்கு பங்களித்து உதவலாம், உதவமுடியும், உதவவேண்டும் என்பதைப்பற்றியும் இப்பொழுது பேசப்போகிறேன்.

நான் கணிதப்பேராசிரியராக 40 ஆண்டுகாலம் பணியாற்றி 1988இல் ஓய்வு பெற்றவன். BITS,பிலானியில் 1965 முதல் 1988 வரை. அதற்குமுன் அமெரிக்காவிலுள்ள இல்லினாய் பல்கலைக்கழகத்திலும்,அதற்குமுன் தமிழ்நாட்டில் மதுரை தியாகராசர் கல்லூரியிலும், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் ஆசிரியராக இருந்தேன். முனைவர் பட்டம் அண்ணாமலை பல்கலையது. எனது பள்ளிப்படிப்பிலும் கல்லூரியிலும் தமிழ் படித்ததில்லை. பாடமொழியே ஆங்கில்ம்தான்.1941இல் நான் 10ம் வகுப்பு (S.S.L.C)தேர்வு எழுதும்போதுதான் ஆங்கிலத்திலேயே கொடுக்கப்பட்டு வந்த

கேள்வித்தாள்கள் முதன்முதல் தமிழிலும் கொடுக்கப்பட்டன. அதுவும் ஒருமாதத்திற்கு முன்புதான் அப்படிச்செய்யப்போகிறோம் என்று சொன்னார்கள். அதனால் ஒருவரும் கேள்வித்தாளின் தமிழ்ப் பக்கத்தைப் பார்க்கவே இல்லை. இப்பொழுது சொல்லுங்கள். என்னைவிட தமிழில் நன்கு தேர்ச்சிபெற்ற நீங்களெல்லோரும்தான் த.வி.க்குப்பங்களிக்க மிகவும் பொருத்தமானவர்கள்.

நான் கணித ஆசிரியராகப்பணியாற்றியபோதுதான் நானாகவே என் தமிழ்ப்பற்றையும் தமிழ்மொழியில் உரையாற்றுவதற்கும் எழுதுவதற்கும் சிறிது தேர்ச்சி பெற்றேன். தியாகராசர் கல்லூரியில் நான் பணியாற்றியபோது அதே கல்லூரியில் தமிழ்த்துறையில் இருந்த ஆசிரியப்பெருமக்களின் பெயர்களைக் கேட்டால் உங்களுக்குப் புரியும் எப்படி என் தமிழ்ப்பற்றாகிய நாற்று செடியாக வளர்க்கப்பட்டதென்று. அவர்களில் சிலர்: அ.கி. பரந்தாமனார்; இலக்குவனார்; அவ்வை துரைசாமி பிள்ளை; மா ராசமாணிக்கணார் முதலியோர்.

ஏன் நாமெல்லாம் த.வி. க்காக இவ்வளவு பாடு படவேண்டும்? யார் இதையெல்லாம் படிக்கப்போகிறார்கள்? ஆங்கிலத்தில் இல்லாததையா நாம் இதனில் எழுதிவிடமுடியும்? இதெல்லாம் சாதாரணமாகக் கேட்கப்படும் கேள்விகள். யாருக்காக, எதற்காக, இவ்வளவு பாடுபடவேண்டும் என்பதற்கு எனக்குத்தெரிந்த ஐந்து காரணங்கள் இதோ:.

1. ஆங்கிலக்கட்டுரைகளிலிருந்தோ அல்லது நூல்களிலிருந்தோ கிடைக்கும் பொது அறிவு தமிழ்மக்களினூடே 20 அல்லது 25 விழுக்காடு வரையில் தான் சென்றடைகிறது. மற்றவர்களுடைய அறிவு தாகம் எப்படித்தணியும்? அறிவியலின் வளர்ச்சி அத்தனையும் இன்று மனிதனுடைய அன்றாட வாழ்க்கையை ஒரு விதத்தில் சீர்படுத்தவும் இன்னொரு விதத்தில் சீர்குலைக்கவும் பயன்பட்டு வருகின்றன. இவைகளில் நல்லது கெட்டது என்ன என்று பாகுபடுத்திப் பார்க்கும் திறன் படிப்பறிவின் அடிப்படையில் ஏற்படும் அனுபவங்களினால் தான் கிடைக்கும். கல்லூரிப் படிப்பையே எட்டிப் பார்க்காத பாமரமக்களுக்கு த.வி. இந்த விஷயத்தில் ஒரு சிறந்த நண்பனாகக் கூடும். இவர்களுக்காகத் தான் நம் த.வி. இல் பல தரப்பட்ட அறிவுக் கட்டுரைகளை எழுத நீங்கள் முன்வரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

2. இரண்டாவதாக, நம் நாடு ஆன்மீகத்தில் சிறந்த நாடாகக் கருதப்படுகிறது. நாட்டின் எந்தமூலையிலுள்ள கிராமத்திற்குச் சென்றாலும் ஆன்மீகத்தின் நிழலையும், ஆன்மீகத்தில் சிறந்தவர்களையும், ராமாயணம் மகாபாரதம் போன்ற பழைய ஆன்மீக நூல்களைப்பற்றிய அடிப்படை அறிவையும் சந்திக்காமல் இருக்கமுடியாது. ஆனால் இந்த 21 வது நூற்றாண்டிலும், நம் கிராமத்திலுள்ளவர்களின் அறிவியல் அறிவைப்பற்றி இந்த மாதிரி சொல்லமுடியுமா? சொல்லமுடியவேண்டும். நான் 1965இல் ஒரு கணித மாநாட்டுக்காக மாஸ்கோ சென்றிருந்தபோது, மெட்ரோ ரயிலில் அன்றாடம்

பயணம் செல்லும் பள்ளி மணவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் ரயிலில் செல்லும் ஒருமணிநேரம் பொழுதுபோக்குவதற்காக ரயில்வே புத்தகக்கடையில் Quantum Mechanics போன்ற அறிவியல் புத்தகங்களை வாங்கி பயணத்தின்போது படிக்கிறார்கள் என்பதை ஆச்சரியத்துடன் கண்டேன். இன்னும் ஒரு பத்து இருபது ஆண்டுகளில் நம் மக்கள் யாவரும் அறிவியலின் அடிப்படைக் கருத்துக்களைக் கண்டு இது நமக்கு சம்பந்தமில்லை என்று ஓடி ஒளிந்து கொள்ளவோ அல்லது தலை பணிந்து ஒதுங்கிக் கொள்ளவோ அவசியம் இருக்கக் கூடாது. இது என் கனவுகளில் ஒன்று. இதற்காக எல்லோரும் கல்லூரிப் படிப்பைப் படித்து முனைவர் பட்டம் வாங்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அது முடியாத, நடவாத காரியம். ஆங்கிலப் படிப்பை எதிர்பாராமலே, ஆங்கிலத்தைச் சார்ந்து இருக்கவேண்டிய அவசியமில்லாமலேயே அறிவியல் அறிவு வளர வேண்டும். இதற்காகவும் ஏராளமாக உங்களை த.வி. க்கு எழுதச்சொல்கிறேன்.

3. மூன்றாவது, இது பள்ளி மாணவர்களுக்கு. இன்றைய மாணவர்கள் தங்களுக்கு வேண்டியபோதெல்லாம் ஆங்கில விக்கிக்குச்சென்று தங்கள் சந்தேகங்களுக்கான விரிவாக்கங்களையோ அல்லது தங்களுக்கு வேண்டிய தகவல்களையோ சேகரித்துக்கொள்கிறார்கள். அவர்கள் தமிழ் விக்கிக்கு ஏன் செல்வதில்லை என்ற காரணம் உங்களுக்கெல்லாம் நன்றாகவே தெரியும். 17000 கட்டுரைகளே உள்ள தமிழ் விக்கி எப்படி அவர்களுடைய தேவைகளுக்கு ஈடு கொடுக்கமுடியும்? இதைப்போல் பத்து மடங்கு அதிகம் நம் தமிழ் விக்கி வளரவேண்டும். இதற்காகவும் உங்களை ஆயிரக் கணக்கில் த.வி.க்கு சேவை செய்ய வாருங்கள் என்று கூவி அழைக்கிறேன்.

4. இதுவும் மாணவர்களைப் பற்றியதுதான். இன்று அவர்களுடைய எதிர்காலக் கனவுகளை அதிகம் தூண்டுவது திரைப்பட உலகம் தான். மாணவர்களின் சிந்தனை அறிவியல் பாதையில் தூண்டப்படவேண்டுமென்றால் தொலைக்காட்சி நிறுவனர்களும் இன்னும் மற்ற எல்லா பத்திரிகைகளும் அறிவியலைச்சார்ந்த செய்திகளையும் கட்டுரைகளையும் நிறைய வரவேற்கவேண்டும். இன்று நடப்பதென்ன? எந்தத் தொலைக்காட்சியிலாவது ஏதாவதொரு அறிவியலாளரைப் பற்றிய நேர்காணலை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? எல்லோருக்கும் உடல்நலத்தில் அக்கரை இருப்பதால் ஒவ்வொரு தொலைக்காட்சி சேனல்களிலும் மருத்துவத்தைப்பற்றி கால் மணி அல்லது அரைமணி பேசுகிறார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட நபரைப்பற்றிய வாழ்க்கைச்சரிதமோ அல்லது அவர்கள் சாதனைகளோ பேசப்படுவது திரைப்பட உலகில் பேர் எடுத்தவர்களையோ அல்லது பேர் எடுக்காதவர்களையோ தான். இந்நிலை மாறி அறிவியலாளர்களின் வாழ்க்கை வரலாறுகள் அதிகமாகப் பேசப்பட்டால், இளைஞர்களின் மனது அறிவியலில் செல்ல வாய்ப்பு ஏற்படும். இதற்காகவே அறிவியலாளர்களின் தலைசிறந்த கலைக்கூடமாகிய் இந்த

மண்ணில் நின்றுகொண்டு, அறிவியலாளர்களாகிய உங்களை, அறிவியலாளர்களைப்பற்றி, ஏராளமாக த.வி. இல் கட்டுரை வரையச் சொல்கிறேன். ஒவ்வொருவரும் அவரவர்களுடைய ஆசிரியப் பெருமக்களைப்பற்றி எழுதுவதில் தொடங்கலாம்.

5. ஆங்கிலத்தில் இல்லாத எதனை இங்கு தமிழில் எழுதிவிடப்போகிறீர்கள்? என்ற கேள்வி கேள்வியளவில் நல்ல கேள்விதான். ஆனால் நம் தமிழ்நாட்டுக் கனவு எப்படி இருக்கவேண்டும்? ஆங்கிலத்தில் இருப்பதையெல்லாம் தமிழில் வடித்து எழுதி எழுதி, இதனால் தமிழர்களின் அறிவியல் அறிவு வளர்ந்து, அகலமாகவும் ஆழமாகவும் பெருகிப் பெருகி, ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் இல்லாததையும் தமிழில் உலகுக்குக் கொடுக்கக்கூடிய் அறிவியல் திறன் நம்மில் சிலருக்காவது அமையவேண்டும் என்பதே நம் கனவாக இருக்கவேண்டும். எத்தனை ஆயிரம் பேர் இந்த சேவையை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்கிறீர்களோ அத்தனை சீக்கிரம் இக்கனவு நனவாகும்.